**வணக்கம்**

**ஆல்இண்டியாரேடியோ, புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் :கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி 03.12.2022 நேரம் மாலை 6 மணி**

---

*தலைப்புச்செய்திகள்*

புதிய தொழில்நுட்பங்களை ஏற்பதிலும், புதுமைகளை உருவாக்குவதிலும், இந்தியா,எந்த நாட்டிற்கும் சளைத்தது அல்ல என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்கள் தொகையை நிலைப்படுத்தும் இலக்கை எட்டும் கட்டத்திற்கு, இந்தியா சென்று கொண்டு இருப்பதாக, மத்திய அரசு, மக்களவையில் தெரிவித்துள்ளது.

ஓமிக்ரான் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, மாநில அரசுகள் கூடுதல் விழிப்புடன்பொது சுகாதார நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டும் என மத்திய அரசு கூறி உள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், புதிதாக 30-பேருக்கு, கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

*கொரோனாஅறிவிப்பு(12)*

150 கோடி கொரோனா தடுப்பூசி இலக்கை எட்டும் திசையில் இந்தியா வெற்றிகரமாக பயணித்து வரும் நிலையில், புதிய வகை கொரோனா வைரஸ் பற்றிய செய்திகளால் கவலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழ்நிலையில், அகில இந்திய வானொலியின் நேயர்கள் அனைவரும், முழுமையாக தடுப்பூசி போட்டுக் கொண்டு, தடுப்பூசி போட்டுக் கொள்வதில், மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம். முகக் கவசம், 2 மீட்டர் சமூக இடைவெளி, கை மற்றும் முகத் தூய்மை ஆகிய 3 எளிமையான வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

கொரோனா பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் பெற, தேசிய அளவில், 1075 அல்லது, 011-23 97 80 46 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக் கொண்டு இன்றைய செய்திகளைத் தொடங்குகிறோம்.

-------------------

*மோடி 1 (18)*

நிதித் தொழில் நுட்பம் பற்றிய, இன்பினிட்டி என்னும் சிந்தனையாளர் தலைமை பேரவையை, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொளி காட்சி

மூலம் தொடக்கி வைத்தார். புதிய தொழில்நுட்பங்களை ஏற்பதிலும், இத்தகைய தொழில்நுட்பங்களின் அடிப்படையில், புதுமைகளை உருவாக்குவதிலும், நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்றும், இந்தியா இதை ஏற்கனவே உலகிற்கு நிரூபித்து இருப்பதாகவும் கூறினார். டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ், கொண்டு வரப்பட்ட முக்கிய மாற்றங்களால், அரசு நிர்வாகத்தில் புதுமையான ஃபின்டெக் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டிற்கு, கதவுகள் திறக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிதி தொழில்நுட்பங்களின் பயன்பாட்டிற்கு இந்தியாவில் ஏராளமான வாய்ப்புகள் இருப்பதாகவும், இது தொடர்பாக ஏற்கனவே எடுக்கப் பட்டுள்ள முன் முயற்சிகளை பெரும் புரட்சியாக மாற்றுதல் அவசியம் என்றும் பிரதமர் கூறினார். இதனால், நாட்டு மக்கள் அனைவருக்கும், நிதி ரீதியிலான அதிகாரம் கிடைக்கும் என்றும், பொதுப் பயன்பாட்டிற்கான இந்தியாவின் டிஜிட்டல் கட்டமைப்பு தீர்வுகளால், உலகமே நன்மை பெறும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தியாவில், முற்றிலும் டிஜிட்டல் முறையில் செயல்படக் கூடிய வங்கிகள், குறைந்த காலத்திலேயே

*மோடி 2 (17)*

செயல்பாட்டிற்கு வந்திருப்பதையும், கடந்த 4 ஆண்டுகளில் முதல் முறையாக இவ்வாண்டு, ஏடிஎம் பரிவர்த்தனைகளை விட, மொபைல் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை, அதிகமாக உள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

நிதியே பொருளாதாரத்தின் ரத்த ஓட்டம் என்றால், தொழில்நுட்பங்களே ரத்த நாளங்கள் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார். அகமதாபாத் அருகே அமைக்கப்படும் கிஃப்ட் சிட்டி நிதி தொழில்நுட்ப பூங்கா, உலக அளவிலான ஃபின்டெக் நிறுவனங்களை இந்தியாவிற்கு ஈர்ப்பதற்கான தலைவாசலாக மட்டுமின்றி, இந்தியாவின் ஜனநாயக மாண்புகள் மற்றும் திறந்த மனதையும் வெளிப்படுத்துவதாக அமையும் என்று அவர் கூறினார்.

கிஃப்ட் சிட்டி நிதித் தொழில் நுட்ப பூங்காவும், அமெரிக்காவின் புளூம்பெர்க் நிறுவனமும் இணைந்து நிதி சேவை மையங்களுக்கான சர்வதேச ஆணையம் சார்பில், இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன. 70க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன் கூடிய, இந்த 2 நாள் இன்பினிட்டி பேரவைக் கூட்டத்தில், பூகோள எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நிதித் தொழில் நுட்பம், நிதி சேவைகளுக்கு அப்பாற்பட்ட நிதித் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள் இடம் பெறுகின்றன.

-------------------

*ராம்நாத் (9)*

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினமான இன்று, புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், மாற்றுத் திறனாளிகளின் அதிகார மேம்பாட்டிற்கு பாடுபட்டவர்களுக்கான தேசிய விருதுகளை, குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் வழங்கி சிறப்பித்தார். தனி நபர்கள், அமைப்புகள், மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கு விருதுகள் வழங்கப் பட்டன. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், நாட்டில் இதுவரை மாற்றுத் திறனாளிகள் 64 லட்சம் பேருக்கு, தனி அடையாள அட்டை வழங்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

-------------------

*மக்களவை (10)*

மக்கள் தொகையை நிலைப்படுத்தும் இலக்கை எட்டும் கட்டத்திற்கு, இந்தியா சென்று கொண்டு இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. சுகாதாரத் துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி பவார், இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதை தெரிவித்தார். தேசிய அளவிலான 5ஆவது குடும்ப சுகாதார ஆய்வின்படி, இந்திய பெண்களின் கருவுறு விகிதம், 2 ஆக குறைந்து இருப்பதாக கூறினார்.

மக்களவையில், மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் பற்றிய திருத்த மசோதா இன்று தாக்கல் செய்யப்பட்டது. மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் மற்றும் மத்திய புலனாய்வு கழகத்தின் இயக்குநர்களுக்கான பதவி காலத்தை நீட்டிக்க வகை செய்யும் அவசர சட்டத்திற்கு பதிலாக, இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.

-------------------

*மாநிலங்கள்அவை (12)*

பிரதமரின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ்,இதுவரை 1 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவிகள், விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப் பட்டுள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சர் திரு. நரேந்திரசிங் தோமர் தெரிவித்துள்ளார். 11 கோடியே 50 லட்சம் விவசாயிகள் இதனால் பயன் பெற்றுள்ளதாக, அவர் இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார். எஞ்சி உள்ள சுமார் 1 கோடி விவசாயிகள் கிசான் போர்ட்டல் இணையதளத்தின் கிசான் கார்னர் பகுதியை அணுகலாம், அல்லது, பொது சேவை மையங்களில், சொற்பத் தொகை செலுத்திப் பதிவு பெறலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

ரயில் நிலையங்களை தனியார் மயமாக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை என்று ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார்.

-------------------

*வினாடி-வினா* (4)

இனி, ஆசாதி கா அம்ருத் வினாடி-வினாப் போட்டியில், நேற்றைய தினம் நமது செய்தி அறிக்கையில் இடம் பெற்ற கேள்விக்கான விடை, சரியான பதில் அனுப்பிய நேயர்களின் பெயர்- விவரங்களுடன், எமது செய்தியாளர் சிதம்பரநாதன்

-------------------

*ஓமிக்ரான்மத்தியஅரசு (15)*

ஓமிக்ரான் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, பொது சுகாதார நடவடிக்கைகளை அமல்படுத்துவதில் மாநில அரசுகள் கூடுதல் விழிப்புடன் செயல்பட வேண்டும் என மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய சுகாதாரத் துறை செயலர் திரு. ராஜேஷ் பூஷன், இதுகுறித்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கடிதம் எழுதி உள்ளார். மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் ஏர்-சுவிதா இணையதளத்தை அணுகும் வசதி அனைத்து மாநிலங்களின் நோய் கண்காணிப்பு அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், இவர்கள் அன்றாடம் இந்த இணையதளத்தை அணுகி, வெளி நாடுகளில் இருந்து தத் தம் மாநிலங்களுக்கு வரக்கூடிய பயணிகள் பற்றிய விவரங்களை முன்கூட்டியே அறிந்து கொள்ள வேண்டும் என்றும், அவர் கூறி உள்ளார். தொடர்ச்சியான கண்காணிப்பு, அதிகமான பரிசோதனைகள், பாதிக்கப் பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களின் கண்டுபிடிப்பு போன்ற அணுகு முறைகள் மிக முக்கியம் என்றும், தொற்று கண்டறியப் பட்டவர்களின் உயிரியல் மாதிரிகளை, மாநிலங்கள் உடனுக்குடன், மரபணுத் தொடராக்க ஆய்வுக்கு அனுப்பி வைத்தல் அவசியம் என்றும், அவர் கூறி உள்ளார்.

-------------------

*புதுச்சேரிகொரோனா* (9)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், இன்று காலை 10 மணி வரையிலான 24-மணி நேரத்தில், புதிதாக 30-பேருக்கு, கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது. அதே நேரத்தில், 29பேர் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்து விடுவிக்கப் பட்டனர். புதுச்சேரியில் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தார்.

தற்போது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4-பிராந்தியங்களிலும், கொரோனா நோயாளிகள், 299-பேர் உள்ளனர். யூனியன் பிரதேசத்தில் இதுவரை, 2-ஆவது தவணை உட்பட, 12-லட்சத்து 48

ஆயிரத்து 374 டோஸ் கொரோனா தடுப்பூசிகள், பயனாளிகளுக்கு போடப் பட்டுள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

-------------------

புதுச்சேரிமுகாம் (17)

100 சதவிகித கொரோனா தடுப்பூசி இலக்கை எட்டிய மாநிலமாக புதுச்சேரியை மாற்றும் முயற்சிகளின் கீழ், தடுப்பூசி விகிதம் குறைவாக உள்ள பகுதிகளை தேர்ந்தெடுத்து சிறப்பு தடுப்பூசி பணிகளை மேற்கொள்ள மாநில அரசின் சுகாதாரத் துறை திட்டமிட்டுள்ளது. இதன்படி, ரெட்டியார் பாளையம் பகுதியில் நாளையும், நாளை மறுநாளும் 150 மருத்துவ குழுக்கள், வீடு வீடாக சென்று, இதுவரை தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட உள்ளன. இப்பணிகளுடன் சேர்த்து, சிவப்பு குடும்ப அட்டைதாரர்களை ஆயுஷ்மான்பாரத் காப்பீட்டு திட்டத்தில் சேர்க்கும் பணிகளும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களை டிஜிட்டல் சுகாதார அட்டை திட்டத்தில் சேர்க்கும் பணிகளும், ஒருங்கே மேற்கொள்ளப்படும். ரெட்டியார் பாளையம் பகுதி மக்கள், தேவையான ஆவணங்களை தயாராக வைத்திருந்து, மருத்துவ குழுவினருடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும், சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. புதுச்சேரியில் இதுவரை தடுப்பூசி போட்டுக் கொண்ட எவருக்கும், ஒவ்வாமை ஏற்படவில்லை என்றும், தடுப்பூசி போட்டுக் கொள்வதால் ஓமிக்ரான் உட்பட, கொரோனா வைரசின் வேற்று உருவங்களில் இருந்தும் பாதுகாப்பு பெறலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வானிலை (15)

மத்திய மேற்கு வங்கக் கடல் பகுதியில், உருவாகி உள்ள ஜாவத் புயல், வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை காலை, வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கரையை நெருங்கக் கூடும் என்று, வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. நாளைய தினம், மத்திய மேற்கு வங்கக் கடல் மற்றும் ஆந்திரா-ஒடிசா கடலோர பகுதிகளில், மணிக்கு 100 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில், சூறாவளிக் காற்று வீசக் கூடும் என்பதால், மீனவர்கள் அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, தென் தமிழக பகுதிகளில் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் 2 நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப் படுகிறது. நாளைய தினம், நெல்லை, குமரி மாவட்டங்களிலும், நாளை மறுநாள் சேலம், ஈரோடு, நாமக்கல், திருப்பூர் மாவட்டங்களிலும் கனமழை பெய்யக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், நாளை மறுநாள் புதுச்சேரி பகுதியிலும் லேசான மழை எதிர்பார்க்கப் படுகிறது.

-------------------

*நாடுகொரோனா (9)*

நாட்டில் இதுவரை பயனாளிகளுக்கு போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை, 125 கோடியே 75 லட்சத்தை தாண்டி அதிகரித்து உள்ளது. கடந்த 24-மணி நேரத்தில் நாடு முழுவதும் புதிதாக 9 ஆயிரத்து 216 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்ட நிலையில், 8 ஆயிரத்து 612 பேர் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர். குணமடைவோர் விகிதம் 98.35 சதவிகிதமாக உள்ளது.

-------------------

*மீண்டும் தலைப்புச்செய்திகள்*

புதிய தொழில்நுட்பங்களை ஏற்பதிலும், புதுமைகளை உருவாக்குவதிலும், இந்தியா, எந்த நாட்டிற்கும் சளைத்தது அல்ல என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவையை நிலைப்படுத்தும் இலக்கை எட்டும் கட்டத்திற்கு, இந்தியா சென்று கொண்டு இருப்பதாக, மத்திய அரசு, மக்களவையில் தெரிவித்துள்ளது.

ஓமிக்ரான் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க, மாநில அரசுகள் கூடுதல் விழிப்புடன் பொது சுகாதார நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டும் என மத்திய அரசு கூறி உள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், புதிதாக 30-பேருக்கு, கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

-------------------